**செய்தி வெளியீடு எண்: 015** **நாள்: 04.01.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.1.2018) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் திருப்பூர், சென்னை, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 69 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரு இரயில்வே கீழ் பாலம், 9 ஆற்றுப்பாலங்கள் மற்றும் ஒரு வரையறுக்கப்பட்ட கீழ்பாலத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

ஒரு மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலைக் கட்டமைப்பு வசதி மிகமுக்கிய பங்கினை வகிக்கிறது. சாலைக் கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தேவைக்கேற்ப மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருப்பூர் மாவட்டம் கொங்கு நகரில் இரயில்வே கடவில் போக்குவரத்து நெருக்கடியை தீர்க்கும் வகையில் 27 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே கீழ் பாலம்;

சேலம் மாவட்டம், கோவிந்தம்பாளையத்தில் 6 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வசிஷ்ட நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் பெரியாத்துமேட்டில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரியாறு ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்; தருமபுரி மாவட்டம், பாளையத்தில் 1 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்; கோயம்புத்தூர் மாவட்டம், அத்திப்பாளையத்தில் 3 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கௌசிகா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் சிந்திலிப்பில் 2 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் காட்டாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்;

சென்னை – அமைந்தகரை அருகே கூவம் ஆற்றின் குறுக்கே 11 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; கரூர் மாவட்டம், வயலூரில் 2 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம், குப்பண்ணம்பட்டியில் 1 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குப்பண்ணம்பட்டி

ஓடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் கலிங்கப்பட்டியில் 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்;

விருதுநகர் மாவட்டம், அல்லம்பட்டியில் விருதுநகர் – அருப்புக்கோட்டை சாலையில் 10 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே கடவுக்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை;

என மொத்தம், 69 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரு இரயில்வே கீழ்ப்பாலம், 9 ஆற்றுப்பாலங்கள், மற்றும் ஒரு வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம்.மணிகண்டன், தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.க.சண்முகம், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திரு.ஆர். கோதண்டராமன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராம சாலைகள்) திரு.எம்.கே.செல்வன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 4.1.2018**